செய்தி வெளியீடு எண் 21 நாள் 09.01.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில், அரசு அலுவலர்கள் மற்றும் செங்கல் உற்பத்தியாளர்கள் சங்க பிரதிநிதிகளுடனான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் செங்கல் சூளைகளில் பணிபுரிய புலம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி சார்ந்து அரசு அலுவலர்கள் மற்றும் செங்கல் உற்பத்தியாளர்கள் சங்க பிரதிநிதிகளுடனான கூட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனைத்து செங்கல் சூளைகளிலும் கணக்கெடுப்பு நடத்தி அருகாமையில் உள்ள பள்ளிகளில் சேர்த்து சீருடை, நோட்டுப்புத்தகம், விலையில்லா பொருட்கள் ஆகிய அனைத்தும் வழங்க முன்னேற்பாட்டுடன் இருக்க சார்ந்த கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மதிய உணவு வழங்கிட நேர்முக உதவியாளர் (மதிய உணவு) அவர்களுக்கும், பள்ளிகளுக்கு சென்று வர போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தி தரவேண்டும் என்றும் எந்த ஒரு குழந்தையும் பள்ளிக்கு செல்லாமல் செங்கல் சூளைகளில் தங்கி விடாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் சார்ந்த செங்கல் உற்பத்தியாளர் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. பெரும்பாலான குழந்தைகள் ஒடிசா மாநிலத்தில் இருந்து வருவதால் ஒடியா மொழி புத்தகங்கள் அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மையங்களில் தயார் நிலையில் வைத்திருக்கவும், குழந்தைகளின் தினசரி வருகைப்பதிவை உறுதி செய்யவும் சார்ந்த கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் 2015-16 ஆம் கல்வி ஆண்டில் 2748 குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்த்து 88 கல்வி தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டனர் எனவும், 2016-17-ம் கல்வியாண்டில் 3000 குழந்தைகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முதன்மைக்கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர். சுகாதாரத்துறை இணை இயக்குநர், குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர், உதவி திட்ட அலுவலர்(அகஇ), நேர்முக உதவியாளர் (மதிய உணவு), உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), இதர துறையை சார்ந்த அரசு அலுவலர்கள், உதவி தொடக்கக்கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், செங்கல் உற்பத்தியாளர்கள் சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~